புதிதாக உருவாக்கப்பட்ட சாப்ட்வேர் மூலம்

இங்கிலாந்தை சேர்ந்த 62 வயது நபருக்கு சிம்ஸ் மருத்துவமனையில் இடுப்பு எலும்பு நவீன மாற்று அறுவை சிகிச்சை

20th May 2022
High Performance Hip Replacement Surgery On a 62 Year Old UK National Using Advanced Technology
SIMS

சென்னை, மே 21–

சென்னை சிம்ஸ் மருத்துவமனையில் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த 62 வயது நபருக்கு நவீன தொழில்நுட்பத்தில் இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இம்மருத்துவமனையின் எலும்பியல் அறுவை சிகிச்சை பிரிவு இணை இயக்குனரும், முதுநிலை நிபுணருமான டாக்டர் விஜய் போஸ் மற்றும் மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவால் இந்நோயாளியின் நிலை அறிந்து அதற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலம் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இது குறித்து எலும்பியல் அறுவை சிகிச்சை பிரிவு இணை இயக்குனரும், முதுநிலை நிபுணருமான டாக்டர் விஜய் போஸ் கூறுகையில், எலும்பு மூட்டுத் தேய்வினால் ஏற்பட்ட வலி மற்றும் அசௌகரியத்தின் காரணமாக இங்கிலாந்து நாட்டிலிருந்து மைக்கேல் மெக்கன்னா என்பவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

புதிய சாப்ட்வேர்

எங்கள் மருத்துவமனையின் எலும்பியல் துறை மருத்துவர்கள் ஆலோசனையின்படி, அவருக்கு ‘டிஜிகேஸ்ட்’என்ற பெயரில் நாங்களாகவே ஒரு பிரத்யேக சாப்ட்வேரை உருவாக்கினோம். ஸ்மார்ட்போன் உதவியுடனான நேவிகேஷன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, துல்லியமாக அறுவைசிகிச்சை செய்யப்படுவதை இதன்மூலம் நாங்கள் உறுதிசெய்தோம். தொழில்நுட்ப அடிப்படையிலான சாப்ட்வேரைக் கொண்டு செய்யப்பட்ட இந்த சிகிச்சை சிறந்த பலனைத் தந்தது. வழக்கமாக செய்யப்படும் இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையுடன் ஒப்பிடுகையில், இப்புதிய சிகிச்சை செயல்முறை மிகவும் மேம்பட்டதாகும். அதே நேரத்தில் உயர்தொழில்நுட்பம் மற்றும் பிரத்யேக மென்பொருளின் உதவியால் செய்யப்படும் இச்சிகிச்சை நோயாளிகளுக்கு சிறந்த பலன் அளிக்கும்.

இத்தகைய அறுவை சிகிச்சைகளுக்கு உலகளவில் இந்தியா புகழ்பெற்று விளங்குகிறது. தேசிய அளவில் தொழில்நுட்ப ரீதியாக இத்தகைய மேம்பட்ட சிகிச்சை செயல்முறைகளுக்கு மக்கள் விரும்பித் தேடி வரும் மருத்துவமனைகளில் ஒன்றாக எங்களின் சிம்ஸ் மருத்துவமனை தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த சிகிச்சை ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் நடந்தது. கட்டுமானப் பணியாளரான மைக்கேல் மெக்கன்னா, இங்கிலாந்து நாட்டின் நேஷனல் ஹெல்த் சர்வீஸ் வழியாக கட்டணமின்றி இலவசமாகவே இந்த அறுவை சிகிச்சையை செய்துகொள்ளும் முடிவை எடுத்திருக்கலாம். எனினும், வழக்கமான இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையானது, வலியை அகற்றிவிடும் என்ற போதிலும் ஒரு கட்டுமானப் பணியாளராக முழுநேர பணியில் அவரால் ஈடுபட இயலாது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவேதான் அவரது வழக்கமான பணி மற்றும் செயல்பாடுகளை திரும்பவும் உற்சாகத்தோடு மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக சிம்ஸ் மருத்துவமனையில் செய்யப்படுகின்ற அதிக செயல்திறனுள்ள இடும்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையை அவர் தேர்வு செய்தார். அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து தற்போது அவரது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மைக்கேல் மெக்கன்னா கூறுகையில், எனது இடுப்பு எலும்பு மாற்று செயல்முறைக்காக சென்னையில் சிம்ஸ் மருத்துவமனைக்கு வந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எலும்பு மூட்டுத் தேய்மான பிரச்சினையால் கடும் அவதிப்பட்ட பிறகு, உயர் செயல்திறனுள்ள இடும்பு எலும்பு மாற்று செயல்முறையை மேற்கொள்ளுமாறு டாக்டர் விஜய் போஸ் எனக்கு ஆலோசனை வழங்கினார். அவருக்கும் அவரது குழுவிற்கும் நான் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

சிம்ஸ் மருத்துவமனை துணைத் தலைவர் டாக்டர். ராஜு சிவசாமி பேசுகையில்,சிம்ஸ் மருத்துவமனையில் ஆசிய மூட்டு மறுசீரமைப்பு மையம் எலும்பு முறிவியல் துறை தொடங்கப்பட்டதிலிருந்தே எலும்பு மற்றும் மூட்டு அறுவை சிகிச்சைக்கு பிரபல மையமாக தொடர்ந்து இருந்து வருகிறது. மூட்டு மாற்று மறுகட்டமைப்பு எலும்பு, மூட்டுகளை சேதமடையாமல் பாதுகாக்கும் அறிவியலில் சமீபத்திய உத்திகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அர்ப்பணிப்பு உணர்வோடு திறமையும், அனுபவமும் கொண்ட எலும்பியல் அறுவைசிகிச்சை டாக்டர்கள் குழு இங்கு பணியாற்றி வருகிறது. இதன் விளைவாக உலகெங்கிலுமிருந்து நோயாளிகள் சிகிச்சைக்காக எங்களைத் தேடி வருகின்றனர். இதுபோன்ற ஒரு வெற்றிகரமான சிகிச்சை செயல்முறையின் மூலம் எலும்பு மற்றும் மூட்டு சிகிச்சைக்கான தரஅளவுகோலை உயர்த்தவும், புதிய சர்வதேச தரநிலையை நிலைநாட்டவும் இயலும் என்று நாங்கள் கருதுகிறோம்.” என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தில் நேற்று 37 பேருக்கு கொரோனா

சென்னை, மே.21

தமிழகத்தில் நேற்று 37 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று 24 ஆண்கள், 13 பெண்கள் என மொத்தம் 37 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இதில் அதிகபட்சமாக சென்னையில் 20 பேர் உள்பட 7 மாவட்டங்களில் மட்டும் தொற்று பாதிப்பு பதிவாகி உள்ளது. 31 மாவட்டங்களில் யாரும் புதிதாக பாதிக்கப்படவில்லை.

மேலும், 12 வயதுக்கு உட்பட்ட 3 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட 7 முதியவர்களுக்கும் நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது. அதேபோல் அரியலூர், தர்மபுரி உள்பட 14 மாவட்டங்கள் கொரோனாவே இல்லாத மாவட்டங்களாக உருவாகி உள்ளது.

தமிழகத்தில் நேற்றையை நிலவரப்படி 23 பேர் மட்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

64வது நாளாக எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு இல்லை. தற்போது தமிழகத்தில் அதிகபட்சமாக சென்னையில் 180 பேரும், செங்கல்பட்டில் 48 பேரும் உள்பட 315 பேர் சிகிச்சையில் உள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகம்: திரளான பக்தர்கள் சாமி தரிசனம்

ஆலந்தூர், மே.21

நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேக விழாவில் **திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.**

சென்னையை அடுத்த நங்கநல்லூரில் ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. இங்கு ஒரே கல்லில் ஆன 32 அடி உயர ஆஞ்சநேயர் சிலை உள்ளது. இந்த கோவில் மகா கும்பாபிஷேகம் நேற்று காலை நடந்தது. இதையொட்டி யாக சாலை பூஜைகள், ஹோமங்கள் உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடந்தது.

நேற்று காலை யாக சாலையில் இருந்து புனிதநீர் கலசம் எடுத்து வரப்பட்டு கோபுர கலசங்களும், அதை தொடர்ந்து 32 அடி உயர பக்த ஆஞ்சநேயருக்கும் மகா கும்பாபிஷேகம், மகா அபிஷேகம், தீபாராதனை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

கோவில் கும்பாபிஷேக விழாவில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. எம்.பி. ஆர்.எஸ்.பாரதி, இந்து அறநிலைய துறை கமிஷனர் குமரகுருபரன், மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், மாநகராட்சி கவுன்சிலர் நாஞ்சில் பிரசாத், அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி, முன்னாள் எம்.எல்.ஏ. கே.பி. கந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

பெயர் மாற்றம்

IMTIYAZ AHMED MOTHI, தந்தை பெயர்: Mothi, பிறந்த தேதி: 30.09.1999, நெ.9, ஜின்னா 3வது தெரு, கீழ்விசாரம் மேல்விசாரம் –632 509, ராணிப்பேட்டை மாவட்டம், தமிழ்நாடு, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **IMTIYAZ MOTHI,** என்று அழைக்கப்படுகிறேன்.

IMTIYAZ AHMED MOTHI

பெயர் மாற்றம்

SALMA PARVEEN, கணவர் பெயர்: Rasheed Ahmed Kalgari, பிறந்த தேதி: 02.04.1982, நெ.19/1, S.R. தெரு, மேல்விசாரம் – 632 509, ராணிப்பேட்டை மாவட்டம், தமிழ்நாடு, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Salma Parveen Hasanpura,** என்று அழைக்கப்படுகிறேன்.

SALMA PARVEEN

லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட்

CIN : L29269TZ1962PLC000463
பதிவு அலுவலகம் : எஸ்ஆர்கே வித்யாலயா அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் – 641 020.
தொலைபேசி எண்: +91 422 7192255 பேக்ஸ் : +91 422 2220912
மின்னஞ்சல் : secretarial@lmw.co.in இணையதளம்: www.lmwglobal.com

தபால் வாக்கு/மின்னணு வாக்குப்பதிவு அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது யாதெனில், நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 110 மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014–ன் விதி 22 மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் (‘‘MCA பொது சுற்றறிக்கைகள்’’) முறையே வெளியிட்ட 8 ஏப்ரல், 2020 தேதியிட்ட 14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட 17/2020, 15 ஜூன், 2020 தேதியிட்ட 22/2020, 28 செப்டம்பர், 2020 தேதியிட்ட 33/2020, 31 டிசம்பர், 2020 தேதியிட்ட 39/2020, 23 ஜூன் 2021 தேதியிட்ட 10/2021, 8 டிசம்பர் 2021 தேதியிட்ட 20/2021 மற்றும் 5 மே 2022 தேதியிட்ட 3/2022 பொது சுற்றறிக்கைகளின் அடிப்படையில், 11 மே 2022 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிறுவனம் மற்றும் லக்ஷ்மி எலக்ட்ரிக்கல் கன்ட்ரோல் சிஸ்டம்ஸ் லிமிடெட்/ சக்ரதாரா ஏரோஸ்பேஸ் மற்றும் கார்கோ பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையேயான செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகளில் சம்பந்தமுடைய நிறுவனங்களுக்கிடையே நடக்கும் வணிகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள அளவை காட்டிலும் அதிகமான வணிகத்தை பரிவர்த்தனை செய்ய மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்படும். 13 மே 2022 அன்று மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் தபால் வாக்கு அறிவிப்பு அனுப்பும் பணியை நிறுவனம் 20 மே, 2022 வெள்ளிக்கிழமை அன்று நிறைவு செய்துள்ளது.

நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014–ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015–ன் கட்டுப்பாடு 44 மற்றும் மேற்சொன்ன MCA சுற்றறிக்கைகள், ஆகியவற்றுக்கு இணங்க தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") சேவைகளை நிறுவனம் பெற்றுள்ளது. அவர்களின் www.evoting.nsdl.com என்ற மின்னணு வாக்களிப்பு தளத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்குகிறது. தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு 21 மே 2022, சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி 19 ஜூன் 2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு NSDL–ஆல் இயலச்செய்யாது. MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு தபால் வாக்கு அறிவிப்புகள் மற்றும் தபால் வாக்குப்படிவங்கள் அனுப்பப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். எனவே உறுப்பினர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்புகளை தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மூலம் மட்டுமே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத பங்குதாரர்கள், மேற்படி தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மின்னஞ்சல் முகவரியைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேடுகளிலோ கட் –ஆஃப் தேதியில் அதாவது 13 மே 2022, வெள்ளிக்கிழமை அன்று பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மட்டுமே மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தகுதியானவர்கள் ஆவார்கள். கட்–ஆஃப் தேதியில் நிறுவனத்தின் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் இந்த அறிவிப்பை தகவலுக்கானதாக என்று மட்டுமே கருத வேண்டும்.

தபால் வாக்குப்பதிவை நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்காக திரு. M.D. செல்வராஜ், FCS, M/s. எம்டிஎஸ் & அசோசியேட்ஸ், பிராக்டிசிங் நிறுவன செயலாளர்கள், கோயம்புத்தூர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மின்னணு வாக்குப் பதிவுத் தளம் மூடப்பட்ட 2 வேலை நாட்களுக்குள் தபால் வாக்குப் பதிவு முடிவுகள் அறிவிக்கப்படும் மற்றும் அவை பிஎஸ்இ லிமிடெட் (பிஎஸ்இ) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (என்எஸ்இ) ஆகியவற்றுக்குத் தெரிவிக்கப்பட்டு, நிறுவனத்தின் இணையதளமான www.lmwglobal.com மற்றும் NSDL இணையதளம் www.evoting.nsdl.com–ல் பதிவேற்றப்படும்.

நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனம்/வைப்பாளர்களிடம் பதிவு செய்யவில்லை என்றால், மின்னணு வாக்கிற்கான உள்நுழைவு விவரங்களைப் பெற கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்:

i. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள், போலியோ எண்., பங்குதாரர் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்புறம்), பான் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு நகல்), ஆதார் (சுய சான்றளிக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் கார்டு நகல்) உள்ளிட்ட தேவையான விவரங்களுடன் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரின் மின்னஞ்சல் முகவரி lmwgreen@skdc–consultants.com அல்லது நிறுவனத்தின் Investors@lmw.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ii. மின்னணு முறையில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் உங்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை முறையே உங்களின் வைப்பு பங்கேற்பாளர்களிடம் (DP) புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் குறைகள்/கேள்விகளுக்கு, பங்குதாரர்கள் திருமதி பல்லவி மத்ரே, evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் அல்லது NSDL–ன் கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 102 0990–ஐ அழைக்கவும் அல்லது C R சிவ்குமரன், நிறுவனச் செயலாளர், நிறுவனத்தின் கார்ப்பரேட் அலுவலகம்: 34ஏ, காமராஜ் சாலை, கோயம்புத்தூர் 641 018 அல்லது தொலைபேசி எண்.+91 422 7198100 அல்லது மின்னஞ்சல் : secretarial@lmw.co.in–ல் தொடர்பு கொள்ளவும்.

தபால் வாக்கு அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளமான www.lmwglobal.com, NSDL–ன் இணையதளமான www.evoting.nsdl.com மற்றும் NSE–ன் www.nseindia.com மற்றும் BSE–ன் www.bseindia.com என்ற இணையதளங்களில் கிடைக்கிறது.

நிறுவன குழுவின் உத்தரவுப்படி
லக்ஷ்மி மெஷின் ஒர்க்ஸ் லிமிடெட்டிற்காக
C R சிவ்குமரன்
நிறுவனச் செயலாளர்

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 21 மே 2022

பிரதின் லிமிடெட்

Pradhin Limited
(Formerly known as Bhagwandas Metals Limited)

பதிவு அலுவலகம்: 61, செம்புதாஸ் தெரு, சென்னை 600001, தமிழ்நாடு, இந்தியா
CIN: L15100TN1982PLC009418 தொடர்பு எண் : +91 99250 52000
வலைத்தளம்: www.pradhin.com மின்னஞ்சல்: info.pradhin@gmail.com
கிளை மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 203 S.F. சொலிட்டர் FP 182, SP–182/D, T.P.S-14, B/s. வைபவ் அபார்ட்மென்ட்–2, பம்பாய் கேரேஜ் எதிரில், ஷாஹிபாக், அகமதாபாத் 380004, குஜராத், இந்தியா.

மார்ச் 31, 2022ல் முடிந்த ஆண்டுக்கான தனியான தணிக்கையான நிதிநிலை முடிவுகள் அறிக்கையின் சுருக்கம்

(இபிஎஸ் தவிர மற்றவை ரூ. லட்சத்தில்)

வ எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
		31.03.2022	31.12.2021	31.03.2021	31.03.2022	31.03.2021
		தணிக்கை யானது	தணிக்கை யாகாதது	தணிக்கை யானது	தணிக்கை யானது	தணிக்கை யானது
1.	செயல்பாடுகள் மூலம் வருவாய்	0.01	1305.87	2188.54	1929.02	2396.36
2.	காலத்திற்கான நிகர லாபம் (வரி, விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(19.04)	56.33	(22.01)	39.61	(21.23)
3.	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(19.04)	56.33	(22.01)	39.61	(21.23)
4.	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(24.32)	56.33	(23.28)	33.75	(22.70)
5.	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	(24.32)	56.33	(45.48)	33.75	(44.90)
6.	சம பங்கு மூலதனம்	364.69	364.69	364.69	364.69	364.69
7.	31 மார்ச் அன்று மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக இதர ஈக்விடி	–––	–––	–––	–––	–––
8.	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) அடிப்படை மற்றும் டைலூட்டட் (ரூபாயில்)	(0.67)	1.54	(0.64)	0.92	(0.62)

குறிப்புகள்:

1. 31 மார்ச் 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான பிரதின் லிமிடெட்டின் (‘‘கம்பெனி’’) மேற்கண்ட முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, மே 19, 2022 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. 31 மார்ச், 2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் இந்த முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
3. நிறுவனம் ஒரே ஒரு செயல்பாட்டுப் பிரிவை மட்டுமே கொண்டுள்ளது.
4. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் தற்போதைய காலத்தின் வகைப்பாட்டை உறுதிப்படுத்த முந்தைய காலத்தின் புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டு மறுவகைப்படுத்தப் பட்டுள்ளன.
5. மார்ச் 31, 2022 மற்றும் மார்ச் 31, 2021 உடன் முடிவடைந்த காலாண்டின் புள்ளிவிவரங்கள் முழு நிதி ஆண்டு மற்றும் வெளியிடப்பட்ட ஆண்டு முதல் அந்தந்த நிதி ஆண்டுகளின் மூன்றாம் காலாண்டு வரையிலான புள்ளிவிவரங்களுக்கான தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கு இடையிலான புள்ளிவிவரங்களை சமநிலைப்படுத்துகின்றன.

பிரதின் லிமிடெட் இயக்குனர்கள் குழு சார்பாக
ஒப்பம்/– அஜய் சவுத்ரி
நிர்வாக இயக்குனர்
DIN: 00266186

தேதி : 19.05.2022
இடம்: அகமதாபாத்

இசட் எஃப் கமர்ஷியல் வெஹிக்கிள் கண்ட்ரோல் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட்

(முன்பு வேப்கோ இந்தியா லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN: L34103TN2004PLC054667
பதிவு அலுவலகம்: பிளாட் எண் 3 (SP), 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Telephone No.91 44 42242000, Fax No.91 44 42242009
email: cvcs.info.india@zf.com; website: www.zf.com

31 மார்ச் 2022 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சங்களில் EPS தவிர)

விவரங்கள்	தனித்தது					ஒருங்கிணைக்கப்பட்டது		
	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆண்டு		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)
செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம்	78,198.43	65,292.12	71,232.32	254,335.39	186,350.01	78,198.43	65,292.12	254,335.39
இதர வருமானம்	913.87	888.64	658.93	3,752.92	3,888.86	913.87	888.64	3,752.92
மொத்த வருமானம்	**79,112.30**	**66,180.76**	**71,891.25**	**258,088.31**	**190,238.87**	79,112.30	66,180.76	258,088.31
வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	7,671.73	4,322.21	6,725.01	19,574.29	15,226.52	7,671.73	4,322.21	19,574.29
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	7,671.73	4,322.21	6,725.01	19,574.29	15,226.52	7,671.73	4,322.21	19,574.29
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	5,660.33	3,183.52	4,763.37	14,207.44	10,380.49	5,660.33	3,183.52	14,207.44
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	5,301.29	3,184.89	4,997.28	13,853.86	10,185.59	5,301.29	3,184.89	13,853.86
சமபங்கு மூலதனம்								
ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக முந்தைய கணக்கு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி)				210,459.38	198,691.96			210,459.38
ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)								
அடிப்படை	29.84	16.78	25.11	74.90	54.73	29.84	16.78	74.90
டைல்யூட்டட்	29.84	16.78	25.11	74.90	54.73	29.84	16.78	74.90

குறிப்புகள் :

1. மேற்கண்ட 31 மார்ச் 2022 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்படி, இயக்குனர் குழு மே 20, 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மார்ச் 31, 2022 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் சட்டப்பூர்வ தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் அறிக்கை தகுதியற்றது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, மாற்றப்பட்ட இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு விதிகள் 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகளின், விதி 33 மற்றும் இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டுகள் (இண்ட் ஏஎஸ்)-க்கு ஏற்றவாறு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. **செயல்பாடுகளின் வருவாய் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது :**

	தனித்தது					ஒருங்கிணைக்கப்பட்டது		
	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஆண்டு		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2022 (தணிக்கை செய்யப்பட்டது)
பொருட்கள் விற்பனை	71,382.42	59,264.59	66,431.59	230,934.43	166,642.54	71,382.42	59,264.59	230,934.43
பொருட்கள் விற்பனை / வழங்குதல்	6,123.45	5,619.94	4,405.61	21,268.03	17,337.68	6,123.45	5,619.94	21,268.03
பிற செயல்பாடுகளின் மூலம் வருவாய்	692.56	407.59	395.12	2,132.93	2,369.79	692.56	407.59	2,132.93
மொத்தம்	**78,198.43**	**65,292.12**	**71,232.32**	**254,335.39**	**186,350.01**	78,198.43	65,292.12	254,335.39

4. கம்பெனி இயக்கம் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு துறையை மட்டும் சார்ந்தது.
5. மார்ச் 31, 2022 மற்றும் மார்ச் 31, 2021ல் முடிவடைந்த காலாண்டிற்கான கணக்குகள் முழு நிதியாண்டிற்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்கு மற்றும் தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட கணக்கு ஆகியவற்றுடன் சமன்செய்யப்பட்ட கணக்குகளாக மூன்றாவது காலாண்டு வரைக்கான தற்போதைய கணக்குடன் சம்மந்தப்பட்ட நிதியாண்டில் குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்பட்டதாகும்.
6. **அறிக்கையிடல் காலத்திற்கான பிற நிகழ்வுகள் :**
   ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டு 2021–22ம் ஆண்டுக்கான இறுதி ஈவுத்தொகையாக 240% (முகமதிப்பு INR 5 வீதம் ரூ. 12/– ஒரு பங்குக்கு) செலுத்த இயக்குனர் குழு பரிந்துரை செய்துள்ளது.
7. முந்தைய காலாண்டுக்கான / காலத்திற்க்கான தொகைகள் நடப்பு காலாண்டுக்கான / காலத்திற்கான தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டது.

இயக்குநர் குழு சார்பாக
P கண்ணியப்பன்
நிர்வாக இயக்குநர்

சென்னை
20.05.2022

தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: ஸ்பிக் ஹவுஸ், 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை–600 032.
CIN - L24119TN1971PLC006083 Website: www.tacfert.in ; E mail: info@tacfert.com

31 மார்ச் 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகள் அறிக்கை சுருக்கம்

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
	31.03.2022	31.12.2021	31.03.2021	31.03.2022	31.03.2021
	தணிக்கையானது	தணிக்கையாகாதது	தணிக்கையானது	தணிக்கையானது	தணிக்கையானது
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	8,504.46	5,014.98	2,282.12	18,056.54	6,790.71
வரிக்கு முன் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து நிகர லாபம்/(நஷ்டம்)	1,465.43	(1,326.75)	(2,375.78)	(3,397.39)	(5,800.27)
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	1,465.43	(1,326.75)	(2,375.78)	(3,397.39)	(5,800.27)
மொத்த விரிவான வருமானம்/(நஷ்டம்)	1,456.81	(1,326.75)	(2,399.95)	(3,387.79)	(5,796.93)
சமபங்கு மூலதனம்	12,186.76	12,186.76	12,186.76	12,186.76	12,186.76
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) (பங்கு ஒன்றின் மதிப்பு ரூ.10)					
அடிப்படை :	1.20	(1.09)	(1.95)	(2.79)	(4.76)
டைலூட்டட் :	1.20	(1.09)	(1.95)	(2.79)	(4.76)
பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) (பங்கு ஒன்றின் மதிப்பு ரூ.10)					
அடிப்படை :	1.20	(1.09)	(1.95)	(2.79)	(4.76)
டைலூட்டட் :	1.20	(1.09)	(1.95)	(2.79)	(4.76)

குறிப்பு: SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஆண்டு நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் – www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் – www.tacfert.inல் உள்ளது.

G. ராமச்சந்திரன்
நிர்வாக இயக்குனர்

இடம்: சென்னை
தேதி : 19 மே 2022